

# வர்த்தகப் பொருள் கிடங்கில் மாநகர் மன்றம் சோதனை!

நமது நிருபர்

கோலாலம்பூர், நவ.2-

தாமான் பத்து வியூ சுற்றுப் பகுதியிலுள்ள வர்த்தகப் பொருள் சேமிப்புக் கிடங்காக இருக்கும் அந்நியரின் வீட்டை கோலாலம்பூர் மாநகர் மன்றம் சோதனையிட்டது. அந்த வீட்டின் தகுதியை மாற்றிய அந்நியர் மீது சிறப்பு நடவடிக்கையைத் தனது அமலாக்கத் துறை, இயந்திரவியல் மற்றும் மின் பொறியியல் துறை வாயிலாக மாநகர் மன்றம் மேற்கொண்டது.

வீட்டில் வைக்கப்பட்ட வர்த்தகப் பொருட்கள் மீதான 8 பறிமுதல் நடவடிக்கைகளை மாநகர் மன்றம் மேற்கொண்டது.இந்நடவடிக்கை 1982 கூட்டரசுப் பிரதேச திட்டமிடல் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பதிவு மற்றும் ஆவணமாக்கல் நடவடிக்கைகளுக்காகப் பறிமுதல் செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களும் தாமான் மிஹார்ஜா செராஸ், ஜாலான் லொம்போங்கிலுள்ள பறிமுதல் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டதாகத் தனது முகநூல் பதிவில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.